**செய்தி வெளியீடு எண்: 276** **நாள்: 21.04.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 20.4.2018 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, ஆற்காடு குப்பம், அருள்மிகு சோளீஸ்வரசுவாமி திருக்கோயிலில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபம், கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காட்டில் உள்ள தேவசம் மேல்நிலைப் பள்ளியில் 54 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நான்கு வகுப்பறைகள், தோவாளையில் உள்ள அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயிலில் 42 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம் மற்றும் திருப்புறை வாகன மண்டபம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், கலைத்திறனின் நிலைக் களமாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாத்து பராமரிப்பது, அன்றாட பூஜைகள் தங்கு தடையின்றி நடப்பதை உறுதி செய்வது, பக்தர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பது போன்ற பணிகளை இந்து சமய அறநிலையத் துறை மூலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, ஆற்காடு குப்பம், அருள்மிகு சோளீஸ்வரசுவாமி திருக்கோயிலில் தரை மற்றும் முதல் தளத்துடன் 5,700 சதுர அடி பரப்பளவில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 200 நபர்கள் கலந்துக் கொள்ளும் வகையில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபம்;

கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு, தேவசம் மேல்நிலைப் பள்ளியில் 2,641 சதுர அடி பரப்பளவில் 175 மாணவ, மாணவியர்கள் பயிலும் வகையில் 54 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நான்கு வகுப்பறைகள்;

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை, அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயிலில் 1,706 சதுர அடி பரப்பளவில், 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 பக்தர்கள் உணவருந்தும் வகையில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம் மற்றும் 570 சதுர அடி பரப்பளவில் 12 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் வாகனங்களை பாதுகாக்க கட்டப்பட்டுள்ள திருப்புறை வாகன மண்டபம்;

என மொத்தம் 1 கோடியே 67 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான இந்து சமய அறநிலையத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ். இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.மோகன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு.அபூர்வ வர்மா, இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திருமதி ஆர். ஜெயா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 21.4.2018